T-UN-666

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு

தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்

மலர் 3 | திருவள்ளுவராண்டு 2015 – ஆடி – 30 | 14 – 8 – 1984 | இதழ் 5

## முதன்மை இராசராசன்

மாமன்னன் இராசராசன், முதல் இராசராசன் எனப்பட்டான். பெயரால் மட்டும் இவன் முதல்வன் அல்லன். முதன்முதலாகத் தோற்றுவித்த செயற்பாடுகளால் இவன் முதன்மை இராசராசனும் ஆவான்

★ கடற்படை அமைத்த முதல் தமிழ் மன்னன் இவன். இது கடற்படை முதன்மை. ( கி.பி.988 )

★ கல்வெட்டின் தொடக்கத்தில் தன் வெற்றிப் புகழை ''மெய்க்கீர்த்தி'' எனும் பெயரால் அகவற்பாவில் முதன்முதலாக அமைத்தான். இது மெய்க்கீர்த்தி முதன்மை ( கி.பி.988 )

★ ஈழ மண்டலத்தை வென்று தன்னடிப்படுத்தினான். இது கடல்கடந்து நாடுகொண்டு சோழ நாட்டு நேர்முக ஆட்சி செய்த முதல் தமிழ் மன்னன் செயல். இது வீர முதன்மை (கி.பி.993)

★ சோழ நாடு முழுமையும் முதன்முதல் அளந்து பகுத்தமைத்தான். இஃது அளவீட்டு முதன்மை. ( கி.பி.1001 )

★ சிற்றூர்களை ஆளுகை அடித்தளமாகக் கொண்டு, ஊராட்சி முறையை முதன்முதலில் அமைத்தான். இஃது ஆட்சி முதன்மை. (கி.பி.1002 )

★ மாபெருங் கற்றளி எனக் கணிக்கும் தகுதியில் தஞ்சை நகரில் பெருவுடையார் கோவிலை எடுத்தான். இஃது ஆன்மிகக் கட்டட முதன்மை ( கி.பி.1003 — 1010 )

★ நாகப்பட்டினத்துப் புத்த விகாரைக்கு ஆனைமங்கலம் என்னும் ஊர் நிலம் முழுமையும் இறையிலிக் கொடையாக வழங்கினான். இது பரந்த சமய மனப்பாங்கின் முதன்மை. ( கி.பி.1006 )

★ மூவர் தேவாரங்களைத் தில்லை வாழ் அந்தணர் சிறையினின்றும் மீட்டு, நம்பியாண்டார் நம்பி கொண்டு முறைப்படுத்தி நாட்டிற்கு வழங்கினான். இது நூல் வெளியீட்டு முதன்மை ( கி.பி.1010 )

★ இராசராசப் பெருவுடையார் பெருங்கோவிலில் தேவாரம் ஓதுதல், கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்துதல் முதலியவற்றோடு 'சல்லியக்கிரியை பண்ணுவான்' எனும் அறுவை மருத்துவம் அறிந்தவனை அமர்த்தி அறுவைப் பண்டுவத்தை (சிகிச்சையை ) முதன்முதலில் அமைத்துக் கோயிலைச் சமுதாயக் கூடமாக்கினான். இது மக்கள்நல முதன்மை ( கி.பி.1010 )

தமிழ்நாட்டரசால் அவனது ஆட்சி ஆயிரம் ஆண்டு விழா கொண்டாடப்படுகின்றது.

★ இதனால் ஆட்சி ஆயிரம் ஆண்டு விழாப் பெறும் முதல் தமிழ் மன்னன் ஆகின்றான். இதனால் முதன்மை விழாத் தலைவனாகின்றான்.

வளர்க மாமன்னன் இராசராசன் நற்புகழ்!



மாமன்னன் இராசராசன் திருவுருவமான இச்சிலை பெருவுடையார் கோயில் அலுவலனாக இருந்த பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூர்யனான தென்னவன் மூவேந்த வேளானால் வடிக்கப்பட்டது.

## தஞ்சாவூர் - உள்ளாலை, புறம்படி.

இராசராசன் காலத்தில் தஞ்சாவூர் உள்ளாலை, புறம்படி என இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டையின் உட்பகுதி உள்ளாலை என்றும், வெளிப்பகுதி புறம்படி என்றும் அழைக்கப்பட்டன.

நகரில் தெருக்கள், பெருந்தெருக்கள், அங்காடிகள், பேரங்காடிகள், தளிகள், கோயில்கள், வேளங்கள், மடவளாகங்கள் ஆகியன இருந்தன.

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனை ஆட்கள் தெரு, தஞ்சாவூர் உள்ளாலை சாலியத்தெரு, தஞ்சாவூர்ப் புறம்படி மும்முடிசோழப் பெருந்தெரு, தஞ்சாவூர்ப்புறம்படி இராசராசப் பிரம்ம மகாராசன் அங்காடி, தஞ்சாவூர்ப் புறம்படி திரிபுவநமாதேவிப் பேரங்காடி, என்பன அவற்றுட் சில.

இத்தகு இடங்களைக் கண்டறியும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையினரும், தமிழ்ப்பல்கலைக் கழகத்துக் கல்வெட்டுத் துறையினரும் மேற்கொண்டுள்ளனர்.

## மொரீசியசுத் தமிழ் மையச் செயலர் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வருகை

மொரீசியசு நாட்டுத் தமிழ் மையத்தின் செயலர் திரு கோயின் சாமி சினபா மே திங்கள் 5-ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்தார்.

மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களுடனும் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை இணைப் பேராசிரியர் முனைவர் சு.இராசாராம் அவர்களுடனும் கலந்துரையாடினார்.

மொரீசியசு நாட்டுத் தமிழர்க்குத் தமிழ் கற்பித்தல், தமிழின மக்களை ஒன்று சேர்க்கும் சமய விழாக்கள் நடத்துதல் ஆகிய நற்பணிகளில் ஈடுபட்டு வரும் மொரீசியசுத் தமிழ் மையம், குறிப்பாகத் தமிழ் கற்பித்தலில் மேலும் முன்னேற்றம் காணத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்பை வேண்டுகிறது என்று தெரிவித்தார். 'மொரீசியசில் தமிழ் மொழிப் பாடத் திட்டத்தை உருவாக்கவும், பாட நூல்கள் எழுதவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் அனைத்து வகையிலும் இத்தமிழ் மையத்துக்கு உதவும். இப் பொறுப்பினை இவ்விரு நிறுவனங்களும் ஏற்றுச் செயற்படுத்தலாம்' என்று மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

— சு.இராசாராம்

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை

## ஞாயிறு, பிறைத்திங்கள் குறியீடுகள்

ஞாயிறு, பிறைத்திங்கள் குறியீடுகள் ஏறத்தாழ கி.மு.6-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தங்கத்தாலான உண்கலத்தின் மீது இவ்விரண்டு வடிவங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கி.பி.7–ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த நடுகல்லின்மீது இக்குறியீடுகள் செதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் இலட்சுமி விளக்கு, சிலம்பு, மாட்டு மணி, படி, மரக்கால், மரச்சிற்பம், சிலைகள் முதலியவற்றில் இக்குறியீடுகள் காணப்படுகின்றன. மராட்டியச் செப்பேடுகளில் இவ்விரண்டு வடிவங்களும் மிகுதியாக உள்ளன.

கல்வெட்டுக்களில் '**சந்திராதித்தவன்**', '**சந்திரப் பிரவேசம்**', '**சூரியப்பிரவேசம் உள்ளவரை**', '**ஆ சந்திராதித்தவரை**' எனக் குறிக்கப்படுகின்றன. பொதுவாக 'நிலை பெற்றுத் திகழ வேண்டும்' என்னும் கருத்தே இருத்தல் சுட்டப்படுகின்றது. படி, மரக்கால் முதலியவை என்றும் நிறைவுடன் இருத்தல் வேண்டும் எனும் கருத்தில் இக்குறிகள் அவற்றில் வடிக்கப்பட்டுள்ளன.

**— இரா.பவுன்துரை**

அருங்காட்சியகம்

## நெட்டெழுத்தும் வெட்டெழுத்தும்

வரலாற்றைத் தொகுக்கும் மூலச்சான்றுகளுள் செப்பேடு ஒன்று. செப்பேட்டில் அக்காலத்தில் எப்படி எழுதினார்கள் என்று திருவாவடுதுறை ஆதீனத்துச் செப்பேடுகளில் சில கூறுகின்றன. முதலில் செப்பேட்டுச்செய்தி ஓலையில் எழுதப்படும். ஓலையில் எழுதிய எழுத்தை 'நெட்டெழுத்து' என்றனர். பின் அச்செய்தி வடிவாக்கப்பட்ட செப்பேட்டின் மீது வரையப்படும். வரைந்த எழுத்தின் மீது கொத்தியே செப்பேடு உருவாக்கப்படும். செப்பேட்டில் கொத்திய எழுத்தை 'வெட்டெழுத்து' என்றனர். சில செப்பேடுகளில் ஓலையில் எழுதியவர், வரைந்தவர், கொத்தியவர் பெயர்கள் தெளிவாகக் குறிக்கப்பட்டன

— செ.இராசு, கல்வெட்டியல் துறை,

### அகழ்ப்பை — அகப்பை

அகப்பை — இது அகழ்ப்பை என்பதன் மரூஉ. இது, அன்னத்தைத் தோண்டும் கருவி. இது, மரத்தினாலும் தேங்காயின் ஓட்டினாலும் செய்யப் பட்டது.

அபிதான சிந்தாமணி

பக்கம் : 6

## தஞ்சை மாவட்டத்தில் சில சைவ — வைணவக் கோயில்கள்

தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவாக்கத் துறையில் தஞ்சை மாவட்டம் முழுவதிலுமுள்ள சிற்றூர்களைப் பற்றிய ஊராய்வுப் பணித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதில் சிற்றூர் மக்களின் வாழ்க்கை நிலை, பொருளாதார நிலை, சமூக அமைப்பு, கோயில்கள், விழாக்கள், கலை, தொழில் முதலியவை பற்றிய செய்திகள் திட்டமிட்ட வினாப் பட்டியல்கள் மூலம் தொகுக்கப்பட்டுக் கணிப்பொறி மூலம் ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வில் கோயில்களைப் பற்றிய பலவகையான புள்ளி விவரங்கள் பெறப்பட்டன. அவற்றுட் சில கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளன.

| கடவுள் பெயர் | கோயில் எண்ணிக்கை | 20ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் எண்ணிக்கை |
|---|---|---|
| சிவன் | 984 | 58 |
| முருகன் | 89 | 25 |
| சுப்பிரமணிய சுவாமி | 121 | 34 |
| மாரியம்மன் | 1371 | 233 |
| ஐயனார் | 819 | 96 |
| பெருமாள் | 568 | 54 |

**— கணிப்பு மையம்**

## யாழ்ப்பாணத்தில் அடியார்க்குநல்லார்

அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரையாசிரியர். இவர் கொங்கு மண்டலத்து 'நிரம்பை' என்னும் ஊரினர் என்பதைச் சிலப்பதிகார உரைச் சிறப்புப் பாயிரத்தாலும், கொங்குமண்டல சதகத்துப் பாடலாலும் (95) அறிகின்றோம். இவர் பொப்பண்ண காங்கேயன் அரவணைப்பிலிருந்து அவ்வுரையை எழுதினார் என்பதும் சிலம்புப் பாயிரம் தரும் செய்தி.

இவ்விருவர் பெயரால் யாழ்ப்பாணத்தில் பின்வரும் வரலாற்றுக் கருத்து வெளிப்பட்டுள்ளது:

> ''கி.பி.14–ஆம் நூற்றாண்டின் இடையில் இலங்கையின் வடபகுதியிலிருந்த சிங்கைநகரை ஆண்ட குணபூசணசிங்கையாரியன் என்பான், தான் தமிழகத்தினின்றும் அழைத்துக் கொண்ட தொண்டைநாட்டுக் காங்கேயனைப் படைத்தலை வனாக்கிக்கொண்டு, 'அடியார்க்கு நல்லார் என்னும் பண்டிதசிரோமணியைத் தனது முதன் மந்திரியாக்கினான்''

— என்று யாழ்ப்பாண வரலாற்றறிஞர் திரு ஆ.முத்துப் பிள்ளை தம் 'சிங்கையாரியர் சரித'த்தில் ( பக்கம் 27 ) எழுதியுள்ளார். இச்செய்தியைத் தரும் மற்றொரு நூலான 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித'மும்,

> ''அவன் (குணபூசணன் ) தன் பெயராலும் அப்பண்டித சிரோமணி பெயராலும் இரு குளங்களும் அமைப்பித்தான். குளங்கள் முறையே ஆரிய குளம் என்றும் அடியார்க்குநல்லார் குளம் என்றும் வழங்கப்படுவனவாயின '' (பக்கம் 67 )
>
> — எனக் கூறுகின்றது.

இக்குளமும் குளஞ்சார்ந்த நிலப்பகுதியும் இலங்கை யாழ்ப்பாணத்து, நல்லூர் எல்லையில், அடியார்க்குநல்லார் குளம், அடியார்க்குநல்லார் வரம்பு என இன்றும் வழங்கப்படுகின்றன. ( இப் பகுதியில் பின்னர் கன்னார் பெருகியதால் 'கன்னா திட்டி' எனப்படுகின்றது.) இவற்றைக் கடந்த ஆண்டில் யான் காண நேர்ந்தது. வழக்கிலன்றி அரசு நிலப்பதிவு ஆவணங்களிலும்,

> ''வண்ணார் பண்ணைக்குக் கிழக்கிறை அடியார்க்குநல்லார் வரம்பும் தலைமடையும் அடியார்க்குநல்லார் குளத்திலருகும்''.
>
> — எனப் பதிவாகியுள்ளன.

காங்கேயன் பெயராலும் காங்கேயன் துறை, காங்கேயன் சீமா, காங்கேயன் கலட்டி எனும் இடங்கள் உள்ளன.

இவற்றைச் சான்றுகளாகக்கொண்டு யாழ்ப்பாணம் வேலணையில் வாழும் முதுபெரும்புலவர் பொ.செகந்நாதன் என்பார் தமது 'அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி' என்னும் நூலில்,

> 'சிலப்பதிகார உரை அடியார்க்குநல்லாரால் யாழ்ப்பாணத்தில் எழுதப்பட்டது'
>
> — என முடிவு கண்டுள்ளார்.

இக்கருத்து மேலும் ஆராயத்தக்கது.

— கோவை.இளஞ்சேரன்.

## மூலிகை ஆய்வு — தங்கப் பதக்கம் பரிசு

சித்த மருத்துவத்தில் அமுக்கிராக் கிழங்கு மிகப் பயனுள்ள மூலிகையாகக் கருதப்படுகிறது. இச்சிறிய செடி சாம்பல் நிறமுடையது. நீர் நிறைந்த பகுதிகளில் செழித்து வளரும். இதன் பழம் தக்காளி போன்று செந்நிறத்தில், சிறியதாக இருக்கும்.

இச்செடியின் இலை, வேர், விதை முதலியன சித்த மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இதன் இலையிலும், வேரிலும் வைதாஃபெரின்—ஏ (Withaferin-A) என்ற உயிர்ச்சத்து உள்ளது. இது புற்று நோயைக் குணப்படுத்த வல்லது என ஆய்வுகளால் காணப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகச் சித்த மருத்துவப் பிரிவின் பேரா.முனைவர் செ.சாதிக்கும் அவர்தம் குழுவினரும் இக்கிழங்கினைப் பற்றி ஆய்வுசெய்து குசராத் ஆயுர்வேதப் பல்கலைக் கழகத்திற் படைத்த 'கீல்வாயுவிலிருந்து குணமாக்கம்' ( Remedy for Orthritis ) என்ற ஆய்வறிக்கை நூலுக்கு 'அரிஓம் ஆசுரம்' வழங்கிய தங்கப்பதக்கம் கிடைத்தது. இஃது அகில இந்திய அளவில் வழங்கப்பட்ட முதற்பரிசாகும்.

— சித்த மருத்துவத்துறை

### செயங்கொண்டாரது சொல்லாக்கம்

விரல் நகத்தை வெட்டிக் கழிக்கச் சிறு உளிபோன்ற கருவி ஒன்று உண்டு. கலிங்கத்துப் பரணி ஆசிரியர் செயங்கொண்டார் அக்கருவியை ''உகிர் கொள்ளி'' (உகிர் — நகம் ) எனுஞ் சொல்லால் குறித்தார். இஃது அவரது சொல்லாக்கம்.

> ''வாயம் புகளாம் உயிர்கொள்ளி
> வாங்கி உகிரை வாங்கிரே''
>
> — க.பரணி: 13 : 4

''உகிர்கொள்ளி'' ஆங்கிலத்தில் 'நெயில் கட்டர்' (NAIL CUTTER) எனப்படுகிறது.

## 'கணிப்பொறி ஒருங்கும் கோபால் மொழியும்' — பயிற்சி வகுப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கணிப்பொறி மையம், செப்தம்பர் திங்கள் முதல் கிழமையில் 'கணிப்பொறி ஒருங்கும் கோபால் மொழியும்' பற்றிய ஆறு கிழமை முழுநேரப் பயிற்சி வகுப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இருபத்தைந்து மாணவர்கள் இவ்வகுப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பெறுவர். பயிற்று மொழி தமிழாகும்.

இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்போருக்கான குறைந்த அளவு கல்வித் தகுதி பட்டப்படிப்பாகும். இப்பயிற்சி வகுப்பு, கருத்துரை வகுப்பு, தனிப்பயிற்சி வகுப்பு, திறனறி வகுப்பு, தேர்வு, கணிப்பொறியில் நேரடிப்பயிற்சி ஆகியவற்றைக் கொண்டமையும்.

— கா.செ.செல்லமுத்து
கணிப்பு மையம்

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82*1

இ.அ.அ. மட்டும்.

திருமதி புலவர் திலகம்
3/1709, பிச்சாண்டி முதலி சந்து
மானோசியப்பர் வீதி
தஞ்சாவூர்

பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

## புதுமை இராசராசன்

மாமன்னன் இராசராசன் தனது ஆட்சிக் காலத்தில் செய்த புதுமைகள் பல. அவற்றுட் சில:

- ☐ தன்னை மக்கள் தலைவன் ( ஜனநாதன் ) என்று கூறிக் கொண்டான்.
- ☐ கல்லாலின் கீழமர்ந்து அருளுரைத்த திருமேனி கற்சிற்பமாகவே செய்யப்பட்டு வந்தது. இதனை [illegible]ன், சிற்பமாகச் செய்து புதுமை [illegible]த்தினான்.
- ☐ செப்புத் திருவுருவங்கள் உள் கூடுள்ளனவாகச் செய்யப்பட்டவற்றைக் ( கனமாக ) கட்டித் திருவுருவமாகச் செய்தான்.
- ☐ இராசராசேச்சுரத்துப் பண்டாரத்துப் பொன்னை ஊரவையாரும் உழவர்களும் கடனாகப் பெற்று வட்டியுடன் ( பொலிசையுடன் ) செலுத்த வகை செய்து திருக்கோவில், வங்கியாகச் செயல்படும் புதுமை செய்தான்.
- ☐ நாட்டை அளந்து நிலச்சீர்திருத்தம் செய்தபோது, ''இவ்வூர் நிலத்தாரே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர் பாயும் வாய்க்காலும் . . . .'' அமைத்து நீர்ப்பங்கீடு செய்யும் புதுமையைச் செய்தான்.
- ☐ போர்மேற்சென்ற வீரர்கள் உடல் ஊறுபாடு இல்லாமல் வாகை சூடித் திரும்ப வேண்டும் என்று [ கோழிப் போரில் ஊத்தை (உடல்) அட்டாமல் (ஊறுபடாமல்) என்று இடக்கடவ திருவிளக்கு ] இறைவனை வேண்டும் வழிபாட்டுப் புதுமை செய்தான்.

குடவாயில் பாலசுப்பிரமணியன்

## இராசராசன் ஆட்சியில் இசுலாமிய அலுவலர்கள்

பரந்த சமய நோக்குடன் திகழ்ந்த இராசராசன் ஆட்சியில் இசுலாமிய அலுவலர்களும் சோழ நாட்டு அரசு அலுவலர் களாகப் பணி புரிந்தனர்.

தஞ்சையில் 'சோனகன் சாவூர்'
நாகையில் 'துருக்கன் அகமது'

முதலியோர் பணியமர்த்தப் பட்டனர் என்பதைக் கல்வெட் டும், செப்பேடும் காட்டுகின்றன.

புலவர் செ.இராசு
கல்வெட்டியல் துறை



இராசராசன் வென்ற நாடுகள். (மெய்க் கீர்த்திப்படி)

படம் அமைப்பு புலவர். செ. இராசு.

## சில வேடிக்கைப் பெயர்கள்

தஞ்சைப் பெருவுடையார் கோவில் நாட்டியம் – பணிக்காக மாமன்னன் இராசராசனால் தளிச் சேரிப் பெண்டிர் என 400 பெண்டிர் அமர்த்தப்பட்டனர். அவர்களது பெயர்களுள் பல வேடிக்கையாக உள. சில வருமாறு:

| | |
|---|---|
| எச்சு மண்டை, | துட்டி, |
| மூஞ்சி | எட்டி |
| அம்மாறி, | வெம்பி, |
| கொனடி | ஊதாரி |
| பந்தல், | சண்டை, |
| கல்லறை | தாயத்து |

– தளிச்சேரிப் பெண்டிர் கல்வெட்டு

## இராசராசன் காலத்து வாழைப்பழ விலை!

தஞ்சைப் பெருவுடையார் கோவில் பிள்ளையா ருக்கு நாள்தோறும் 150 வாழைப்பழம் படைக்க, தஞ்சை அங்காடி வணிகருக்குக் கோவில் பண்டாரத்திலிருந்து பொன் கடனாக வழங்கப்பட்டது. காசு ஒன்றுக்கு ஆண்டு வட்டி அரைக்கால் காசு. இவ்வட்டியை நாள்தோறும் வாழைப்பழமாகப் படைக்க வேண்டும்.

இதைக் கூறும் கல்வெட்டு, தஞ்சைக் கோவில் மேலைத் திருச்சுற்று முதல் கோட்டத்தில் இரண்டாம் கல்வெட்டாக உள்ளது. அதில் ''காசு ஒன்றுக்கு வாழைப்பழம் ஆயிரத்திரு நூறாக'' என்றுள்ளது. இக்காசு பொன்காசு. அக்காலத்து மதிப்பைக் கணக் கிட்டால் தற்காலத்து ஒரு காசுக்கு ஐந்து வாழைப்பழம் என்று ஆகிறது.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் — 613 001.